உ

கடவுள் துணை.

# இராமாயணம்

## திருப்புகழ் காவடிச்சிந்து.



க. சண்முக முதலியாரவர்களால்
இயற்றப்பட்டது.

பூ. து. மாசிலாமணிமுதலியாரால்
தமது
சுந்தர விலாச அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

1920

...ிஸ்தர் செய்யப்பட்டது. அணா 3

O-,1MSK5,R
N20.
179246

வேலுமயிலுந்துணை

# இராமாயண திருப்புகழ்

## காவடிச்சிந்து

இது,

களத்தூர், வேதகிரி முதலியார் மாணாக்கரும்,

கொரக்கோட்டை. ப. வடிவேலு செட்டியாரவர்கள்

மாணவருமாகிய

க. நாராயணசாமி முதலியாரெனவழங்கும்

க. சண்முக முதலியாரவர்களால்

இயற்றப்பட்டது.

பூ. சு. துளசிங்க முதலியார் குமாரர்

பூ. து மாசிலாமணி முதலியாரவர்களால்

தமது

சுந்தரவிலாசஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1920.

(ரிஜிஸ்தர் காப்பிரைட்.) — (இதன் விலை அணா 2.)

நெ. 3-25. வல்லம் பங்காருசெட்டி வீதி வேபேரி போஸ்டு மதராஸ்.

உ

முருகன் துணை.

இராமாயண

# திருப்புகழ் காவடிச்சிந்து

வர்ணமெட்டு.

## விநாயகர் தோத்திரம்.

தையலே சையோகம் என்ற வர்ணமெட்டு.

பல்லவி

முந்தி யுந்தனடி சிந்தையிற்கோரிட
மூஷிகனே வருவாய் தமிழ்
மூன்றுமெனக்கருள்வாய் (முந்)

சரணங்கள்

தந்திமுகபதி சாமிகுணநிதி
தாதா மலர்பாதா பிரக்யாத வேன்வாதா
சங்கரியின் பாலனே-திகழ்
வல்லபையாள் லோலனே (முந்)

அருமைமறையேற்றும் அவனியோர்கள்போற்றும்
ஆதி பிரக்யாதி பொதுநீதி ஜெகஜோதி
யாருங்கதிகாணனே உனை
யன்றி துணை தோணனே (முந்)

ஞானிக்கொருசாமி நாராயணசாமி
நாடி மிகவோடி மனம்வாடி யுனைதேடி
நம்பிவந்தேன் பாருமே புன
தின்பக்கடல் தாருமே (முந்)

## ஸ்ரீராமர் துதி.

நாமேமுகம்மது மூஸ்தபா என்ற வர்ணமெட்டு.

இந்தவேளைவரம் தந்தெனையாள்வாய்
சுந்தரஸ்ரீராமா
அந்தரர் இந்திரர் கந்தர்வர்போற்று
மயோத்தி ரகுராமா
மான்விழிகோசலை மாதுபயின்றவா
ஞானியின்ராமா
திரிசரர்பொடிபட ஒருகணைவிடுத்திடும்
தசரதராம ராமா
நாராயணசாமி பாராயணஞ்செயும்
நாராயணராமா

பெருமாள் சந்நிதியில்

# தேவர்கள் முறைபாடு

நாராயணா நன்னுகாவ வையா என்ற வர்ணமெட்டு.

பல்லவி

நாராயணா நம்பிவந்தோமையா
பாராய்எங்களைக் கடைக்கண்ணினாலே (நா)

சரணங்கள்

பாவிராக்ஷதர்கள் படுத்தும் துயரம்
பார்த்திருந்துமிந்தப் பராமுகமேனோ
ஆவிசோர்ந்துயாங்க ளடுத்தோமுன் தாளை
ஆதரிக்கவேணும் அபயம் அபயம் (நா)

## தேவர்களுக்கு

# பெருமாள் அருளிப்பாடு

மலடிவயிற்று மகன்போலே என்ற வர்னமெட்டு.

வதைத்திடு மரக்கர்தன்னாலே-இனி
வாடிடவேண்டாம் ஒருகாலே-புகழ்
தயரதன்மகனாய் மண்மேலே-யான் வருவேனே
வந்து அரக்கரைக் கொய்வேனே-உங்கள்
சிந்தைகளிக்கச் செய்வேனே-இனி
முந்தியுங்களைக் காப்பேனே-நீர் செல்வீரே

---

## பெருமாள் திரு அவதாரம்.

விருத்தம்.

இவ்வகையாய் மாயவன்முன் நடந்ததென்றே
எண்ணிமுனிக் கலைக்கோட்டு முனிவனாலே
அவ்வகையாய் புத்திரகாமேஷ்டி தன்னை
அயோத்தியர சனைக்கொடுசெய் வித்தபோதில்
பைவளரும் பாம்பணைமேற் பள்ளிகொள்ளும்
பரமனே தசரதன்செய் பாக்கியத்தாலே
மெய்வகைசே ருலகெல்லாம் மனுவிக்கியான
விதிசெய்வான் அவதாரம் அதுசெய்வானே.

---

# கௌசிகர்

## ஸ்ரீராமரைக் குறித்துக் கேட்குதல்.

பாளைவாய் கமுகில் என்ற வர்னமெட்டு.

பூமியோர்கள்போற்றிடும் காமதயாதபூபா
ராமமூர்த்தியைத்தகுி தாரும்-பல
காமகம்செய்யாமல் நீரும்

பாவியான தாடகையின் ஆவியைப்போக்கி யெனது
வேள்வியை முடித்திட வேணும்-எந்தன்
ஆவிதரிக்குமதால் காணும்

## தசரதர்கௌசிகர்வ ர்த்தையைமறுத்தல்

மஞ்சுநிகர் குந்தளபின்னே என்ற வர்ணமெட்டு.

ராமனேது சகுவரவேணும இதர்க்கேகாபவன் இருக்கயானும்
நானேவருகிறேன் காணும்
பூமியிற்சிறு பாலனாகிய ராமன்பாணம் போடவறிகிலன்
வானுலகோர்வரினும் வாட்டுவேன் எந்தவிதமு மவனைக்கொன்று
நானேயுன் வேள்வியை முட்டுவேன்

## வதிஸ்டர்தகவுரைத்தல்

பொன்னுலவு சின்னிகுள என்ற வர்ணமெட்டு.

தாரினிற்றவ மேவியமுனி கோபமுந்தனுக் காகிடாது
தயரத பூபனே நீ கேளும்-ஒரு
தப்பு மணுகிடாதென் றுணரும்
சங்கையின்றிக் கோசிகன்பின் மங்களஸ்ரீ ராமச்சந்த்ரனை
சடிதியனுப்பிவிடு வீரா-இனி
சாரும்நற்காலத்தைப் பாரே

## தாடகை சம்மாரம்

ஆறுமுகவடி வேலவனேகலி என்ற வர்ணமெட்டு.

செம்பொன்முடிகொண் ராவணன் வெற்றிக்கொடியும்விழுந்தாப்போலேஸ்ரீ
எம்பெருமானபாணத்தால்தாடகைப்பாவிமாண்டாளமண்மேலே
அரக்கர்குலமெல்லாம்நொறுங்கிப்பவாட்டி நோகாலமிப்போதாச்சு-நல்ல
சுரக்குலமெல்லாம்துன்பமொழிந்தித்திளைஞ்சுகித்திடநாளாச்சு
பட்டவடியினால்தாள முடியாமல் பாவிசுவாகுவுப்படுத்தான் பின்னால்
கட்டுகட்டித்தடுமாறி மாரீசனுங்கொட்டிலோட்டமெடுத்தான்

# ஸ்ரீராமர் சீதையைக்கண்டு வர்ணித்தல்.

எந்த விதத்திலும் என்ற வர்ணமேட்டு.

பல்லவி

எந்தவுலகிலும் இந்தமங்கைபோற்காணேன்
ஏது இவள் சித்திரம் மய
லாகச்செயும் நித்தியம் (எந்)

சரணங்கள்

சுந்தரமீறிய அந்தரர்கோறிய
ஜோடி என்லேடி யான்வாடி வந்தேனேடி
சொக்கிமனம் வாடினேன் அவள்
பக்குவத்தைத் தேடினேன் (எந்)
சரளீ நாரயண சாமிடந்தகாண
கரைந்தேன் சிதைந்தேன் மெலிந்தேன் வதைந்தேன்
கண்டுப் விடலாகுமா மதன்
கொண்டபழிபோகுமா (எந்)

கைகேசி கூனியின் சொல்படி தயரதரிடம் வரம்பெற்றதால்

# ஸ்ரீராமர் வனமேகுதற்கு கோசலையிடம் விடைகொள்ளல்

மஞ்சமிகர் குந்தளமின்னே என்ற வர்ணமெட்டு.

வனம்போய்வருகிறேனம்மா
மனமுவந்து எனையேபெற்ற
மாதுகோசலையே என்னம்மா
வர்னசிறிய வன்னையாலே மன்னன்தந்தை சொன்னபடியே
வந்தேன் மரவுரியோடு
உனக்குரிய கணவனை நீ
சிந்தைமகிழ்வாய்க் காக்கநாடு (வன)

## ஸ்ரீராமா வனம் ஏகுதலைப்பற்றி

## லட்சுமணர் கோபங்கொள்ளல்

ஷாதிகேசமன்பகர் பூலோகிலே என்ற வர்னமெட்டு.

நான் தருவேன் ராமனுக்கு — நன்மகுடம்
நன்மகுடம் — நன்மகுடம்
ஏன்பரதனுக்கு — தரிப்பதுகிரீடம்
தரிப்பதுகிரீடம் — தரிப்பதுகிரீடம்
பாரதுயீபவர் — அறிகுவேன்பாரீர்
சித்திரக்கணையினல் — சிதைத்திடுவேன்நான்
சிதைத்திடுவேன்நான் — வதைத்திடுவேன்நான்
எத்தனைபேர்களா — னலும்வரட்டும்
என்னைக்காணட்டும் — கணைவாங்கட்டும்
அடுக்குமோபடிக்குளே — அரசநீதியோ

## தண்டகவன ரிஷிகள்

## ஸ்ரீ ராமரைத் துதித்தல்.

அநுமந்தா அநுமந்தா என்ற வர்னமெட்டு.

ஸ்ரீராமா ஸ்ரீராமா
திருவருள் புரிஜெக — பரகுருமுராஹரி ஸ்ரீ
இருக்குறைவேதா — இலக்ஷிமிநாதா
இதுதினமதிடர் — அகலக்கண்பாரும் ஸ்ரீ
மனமதுவாடி — வணங்கினேம்நாடி
மரவுரியொடுவரும் — ரவிகுலதீபா ஸ்ரீ
உனைவிடவேறு — உயர்துணையாறு
மனமுமங்கெதமதிடர் — மடியக்கண்பாரும். ஸ்ரீ
நாராயணசாமி — நம்பிவந்தேன்பூமி
நாயகதாயக — மாகியதேவா ஸ்ரீ

# ஸ்ரீராமர் தண்டகவன ரிஷிகளுக்கு அபயமீதல்.

லாவணிவர்னமெட்டு.

கருவும்மலையுஞ்சூழும் தண்டகவனத்தோரே
சஞ்சலங்கொள்ளவேண்டாம் நீரும் நீரும்
ஒருக்கணையாலே இராக்ஷதப்பதர்களை
ஒழிக்கிறேனின்று சற்றே பொறும் பொறும்
வணங்கினோர்களைவிட்டு மற்றவர்களைவெந்தன்
வாளியால்வதைககுறேன் பாரும் பாரும்
வானவர்முதலானோர் யார்துணைபெறினும்
வதைக்குறேன் சத்தியந் தேரும் தேரும்
அண்டபகிரண்ட மப்பால்போனபோதிலும்
அவரைவிடாதுயெந்தன் கணை கணை
அஞ்சாதீர் அஞ்சாதீர் தண்டகவாசியுங்கள்
ஆசீர்வாதமிப்போ துணை துணை

# பஞ்சவடிதீரத்தில் ஸ்ரீராமரைக்கண்டு சூர்ப்பனகை மோகித்தல்.

என்னடி நான்பெற்றமங்கை என்ற வர்ன மெட்டு.

வானுலகமதன்தானோ சிவன்றானோ ஹரிதானோ பிரமன்
வையத்திலேன் படைத்தானோ இவன்
வரலாரெனு அறியேனது ஒருபோதிலுமெனைகூடிடும்
வார்த்தையுரைத்திடுவானோ எந்தன்
பேச்சைத்தடுத்திடுவானோ

பெண்கள்மயங்கிடுந்தோளன் யிணைதாளன் அழகாளன் யான்
பிரியங்கொண்டிடு மணாளன் இவன்
பேரிலேமன மாகியேதினங் கூடியேபெரு வாழ்வுபெற்றிடும்
பெண்களுக்கேநற் சிலாக்கியம் காணப்
பெற்றேனின்னேரமென் பாக்கியம்

# சூர்ப்பனகை பங்கம்.

விருத்தம்.

தேவனிடம்சூர்ப்பநகைமையல்கொள்ள தம்பியிடஞ்செல்லச்சொல்ல
பாவிவந்தாள்லக்குமணன்திரிபங்கம் பண்ணிவிடபொறுக்காளோடி
மேவிதனதண்ணனிடஞ்சென்றுதிரு சீதையிடஅழகின்சீரை
கூவியேயுரைக்கலுற்றாள்ராவணனுங்கேட்டுமனம்பொறுக்காதானன்

## ஸ்ரீராமர் முதலானவர்கள் வரலாற்றை சூர்ப்பனகை ராவணனிடம் சொல்லுதல்.

வங்கார மார்பிலணி என்ற வர்ணமெட்டு.

மஞ்சாடு கானகத்தி லேகிடயா ஞேர்புதுமை
சிங்கார தோளிரு பேரிருச்க யேர்பரவும்
நங்கா யிருந்திடவுங் கண்டுவுனை வந்தடைந்தேன் செவிசாயும்

அஞ்சாத தீரரவர் ராமரொடு லக்குமணன்
அன்பாய சீதையொடு மூவர்க ளயோத்திகர்
முன்பாக நீயுமந்த மாதைகொண்டு வாழுமனந் துணிவாயே

## மாரீசன் ராவணனை யிடித்துரைத்தல்

மலடிவயிற்று மகன்போலே என்ற வர்ணமெட்டு.

பைங்கொடி சீதைப்பேர் சொல்லாதே-அது
எந்தவிதத்திலும் பொல்லாதே-இப்போ
வந்திராம பாணத்தில் நம்தலை நில்லாதே

முன்விஸ்வாமித் திரனாலே-பாகந்
தன்னுள்வந்தான் நமன்போலே-சுவாகு
அன்னையுமாண்டாள் மண்மேலே நானிங்கு வந்தேனே

## மாரீசனேனும் மாயமானைப் பிடித்துத்தர சீதாதேவி

# ஸ்ரீராமரைக் கேட்குதல்

ஆறுமுகவடி வேலவனேகலி என்ற வர்ணமெட்டு.

### சீதை சொல்வது.

பொன்மயமாகியமானென்றுபோகுது பிடித்துத்தாருமையா- இப்போது
என்மனமகிழ்ந்து கொஞ்சிவிளையாட நாதாகண்பாருமையா

### ஸ்ரீராமர் சொல்வது.

தேனினுமென்மொழி யாகியபெண்மயில் தேவியேயான்பிடிப்பேன்-இந்த
கானில்பிடித்துநீ வைத்துவிளையாட காரிழையேகொடுப்பேன்

### லக்ஷ்மணன் சொல்வது

மானல்லமானல்ல மாயமானுகவே மண்ணில்தோனுதம்மா- அந்த
மாரீசனேயொரு மாயமானுகவே வந்ததாய்க்காணுதம்மா

### சீதை சொல்வது.

ஆவியெல்லாமந்த மானின்மேற்றேனுது அட்டிசெய்யலாமா-இங்கு
தாவிசொல்லுமிளை யோரின்வார்த்தைதனை சரிசொல்லப்போகுமா

### ஸ்ரீராமர் சொல்வது.

சிந்தையினில்வருத்தத்தை விட்டிடுதேவியே தேர்ந்திடுநீ-அதை
எந்தவிதத்திலும் பிடித்துத்தருகிறேன் இன்பமடைந்திடுநீ

### லக்ஷ்மணன் சொல்வது.

கூத்துப்பார்க்கவே போனவிடத்தினில் பேய்பிடித்தாப்போலே-யான்
பார்த்தாப்போல்சொன்னலும் பேழைசொல்அம்பலம் பாலிக்குமோமேலே

# சீதைக்கும்ராவண சந்யாசிக்கும்தர்க்கம்.

நாமாஜி கைசே யென்ற வர்ணமெட்டு.

### சீதை சொல்லுதல்.

வாருங்கள் வாருங்கள் சடைமுடியாளரே
வந்தனம்வந்தனம் பெரியோரே

### இராவணன் சொல்லுதல்.

யாருன்பேரென்ன அரிவையேயுரையாய்நீன்
ஆளனின்பேரென்ன அறிவிப்பாய்

1792

## சீதை சொல்வது.

தசரதன்சேய்ஸ்ரீ — ராமன்மணாளன்
ஜானகியென்பேர் — லக்ஷ்மணன்மைத்துனன்
தசைகள்பழுத்த — பழம்போலே இவன்
தனிமையவந்த — காரணமேன்

## இராவணன் சொல்வது.

வந்ததைச்சொல்லுவேன் — சந்தோஷமாய்க்கேள்
வளம்பெருமிலங்கை — ராவணன்நான்
சீதைமகிழவாரு — மங்கையைநாடியே
தேடிவந்தேநான் — கூடுவையோ

## சீதை சொல்லுதல்.

யேடாகூடவார்த்தை — யென்னிடஞ்சொல்லாதே
யினியோரும்ராயர்வந்தால் — கொல்லுவாரிப்போதே
போடாமூடா — ஓடிவோய்பேதே
புத்தியில்லாதகெட்ட — ராவணத்தீதே

## இராவணன் சொல்லுதல்.

பலமிலாமனிதரை — பாராட்டுவானே
பயப்படமாட்டேனுன் — செந்தேனே
நிலமோடுந்தனை — கரத்திலெடுத்தேனே
பேரிழையேகொண்டு — பேகிறேனுனே

# இராவணன்

## சீதாதேவிபக்கல்குறையிரந்தல்.

ஆறுமுகவடிவேலவனே யென்ற வர்ணமெட்டு.

என்னவினைசெய்குவேன் எப்படியுய்குவேன்
என்மொழி கேளன்னமே-அந்த
மன்மதன கணையால் துன்பப்படுகிறேன்
மருவிடவா முன்னமே
ஆலைக்கருப்புபோல் வேளைக்குஞ்சோறின்றி
ஆசையிற்சிக்கினேனே-அந்தி
மாலைக்குந்தூக்க மிலாமலேநாளைக்கும்
நான் துரும்பாகினேனே

# அநுமார்சீதையைத்தேடுதல்.

கனிகோண்டினி என்ற வர்ன மெட்டு.

பல்லவி

தேடிக்காணனே சீதாதேவியை
தேடிக்காணனே (தே)

அநுபல்லவி.

மாடமாளிகையும் கூடகோபுரமும்
நீடுயெழுநூறு யோசனைகாதமும் (தே)

சரணங்கள்

கும்பகர்ண விந்த்ர ஜித்தன்விபீஷணன்
கூறுமதிகாயன் அட்சயன்தேவகாந்தன்
அம்புவியோர்போற்று மன்னைமண்டோதரி
அரண்மனைலங்கா புரிமுழுதுமே (தே)

இடுக்குமிருட்டு ஒடுக்குமுறியின்
அடுக்குடன்மூலை முடுக்கும்புலைகள்
பிடிக்காவிடத்தும் மடத்தும்தடத்தும்
போயிதாவிபார்த்தும் தாரையின்னம்கண்ணுல் (தே)

---

# அநுமார் ஸ்ரீராமரை வர்ணித்தல்.

கண்ணுயிரம் படைத்த என்ற வர்னமெட்டு.

ருமசவுந்தரியம் நாமோசொல்லவுந்தரம்
பூவுலகெனுஞ்சுமை மேவிடுஞ்சேடனும் புகலான்-தினம்
தாவியேதுதிசெயு மன்பருளத்தைவிட் டகலான்

சோமசூரியர்காந்தி போமேவெட்கத்தையேந்தி
தோளொடுமலர்க்கை காலுக்குங்கரோதோர்க்கும்-அணி
வாள்மரவுரியிடை நடைகண்டோர்மன தார்க்கும்

திருவேவிளங்குமுகத் தருவோடவருடலை
தெரிந்தொருகாலெழு தாள்மதவேள்பலநாளை-அவர்
தரித்திடுஆழியை கொடுத்தனுப்பினரிவ்வேளை

# அநுமார்

## இலங்கைக்குப்போகுதல்.

வந்தவேளையிது என்ற வான மெட்டு.

பாய்ந்தானே அநுமான் பாய்ந்தானே
பாரமகேந்திரம் பாய்ந்தானே
மாய்ந்திடராவணன் காலதூதன்போல்
ராமனைத்துதித்துப் பாய்ந்தானே

# இலங்கணி வதை.

மகனே மகனே யென்று என்ற வர்னமெட்டு.

### இலங்கணி.

அடடா அடடா இந்த வடவாசற்காவலில்
அச்சமில்லாமல்வந்த தாரடா
அகலுவாயினைதவிட்டு நீயடா
திடமுள்ளாளலங்கணி காவலென்றெண்ணுமல்
சீறுவதேனடா வானரரூபனே (அட)

### அநுமார்.

துஷ்ட துஷ்டியுந்தன் கஷ்டகாலமென்முன்
சிக்கிக்கொண்டாயடி லங்கணி-எந்தன்
கைக்கிரையாகவே வந்தாய்நீ
இஷ்டகுலராம தூதனனுமான்யான்
இதோசின்ன பின்னமாகவே செய்குரேன் (து)

### இலங்கணி.

உன்கையடியினலென்னுயிர் போகுதே
முன்னேபிர்மனிட்ட விதியிதே
உன்னையெதிர்ப்பவரில்லை யினிமேதே
அண்ணையப்பாதபல் காரம்யான்செய்குரேன்
ஆட்டுக்குட்டியிந்த அரக்கர்படையுனக்கு (உ)

# அநுமாரை இராவணன் கேழ்க்குதல்.

சிதம்பர தேசிசனமா என்ற வானமெட்டு.

பல்லவி

ஆரடாநீகுரங்கே இங்குவந்தாய்
ஆரடாநீகுரங்கே

சரணங்கள்

ஆரடாகுரங்கே பரிவாயோலங்கை
அச்சமில்லாமலே யடங்கிச்சொல்லாமலே
(சுரு) அசோகவனத்தையும் நிசிசரர்சனத்தையும்
அழித்தவனேயுரை விடுத்திடேனின்குரை (ஆர)

---

# அநுமார் இராவணனுக்குவிடை கூறுதல்

வெள்ளிமலை யோத்தபலமேடை என்ற வர்னமெட்டு.

அடடாராவணநீயே கேளும் ஸ்ரீ
ராமதூதனுகுமென் னுளும்
அண்டரொடு மண்டலர்கள் வந்திடினுங் கொன்றிடுவேன்
நானே அநுமானே

பெற்றவரங்களைக்காக்க நாடு நல்ல
பெருமையுடையும்வழி கூடு உந்தன்
பேதைமதி யாலேயந்த சீதையைக் கருதிடாதே
பேதாய் விடு தீதாய்

கருதுவீரராமனடி நீயே அதால்
கடைத்தேறிபிழைத்திடு வாயே அடா
காலமும் பலமுந்தெரி யாமலே குதிக்கிறாய்நீ
கெடுவாய் அகம் விடுவாய்

கெடுமதி கண்ணிற்குதோற்ற வில்லை நீயும்
கேட்டிடுவாய் எந்தனிட சொல்லை அடா
கேடுவரும் பின்னேமதி கெட்டுவரும் முன்னேயென்பார்
கேளும் என் நாளும்

## வானரவீரர்கள் சேதுபந்தனங் கட்டுதல்.

விருத்தம்.

இரக்கமாய் வருணனிந்த வாறுபோற்ற
இராகவனும் கருணைசெய்து மருக்காந்தார
அரக்கர்மேல் அக்கணையை விடுத்தானப்பால்
அபயதானங்கொடுத்தே வழிகாட்டென்றான்
பரத்தினால் அவனும்என்மேல் அணைசெய்தந்தான்
படையெல்லாம் நடத்தென்றான் கூடிக்கூடிக்
குரங்குவீரர்கள்மலைமேல் மலையாய்வீசிக்
கொட்டினர் கடலில்அணை கட்டினரே.

---

## திரிச்சடை கண்டகனவை
## சீதாதேவியிடம் சொல்லுதல்.

பூமிமேச்சிமே் என்ற வர்ணமெட்டு.

மண்டோதரிவெறுந் தலையைசெப்பினால் சீவினாள்
அழுதுகூவினாள் மிகத்தாவினாள்
என்றன்பிதாவீட்டில் அந்தமாதும்வந்து மேவினாள்
புஷ்பங்களெல்லாம் கரிகளாய்க்கருகவுங் கண்டனே
கோயில்கண்டனே பேயுங்கண்டனே அந்த
துஷ்டராவணனென்னைத் தலையோடவந்திடக்கண்டனே
சிந்தைமகிழ்வாக எந்தன்கனவைநீ கேளம்மா
சீதாயம்மா துயர் யேனம்மா பாப
பந்தவரக்கர்களந்தரமேசேர்வார் பாரம்மா

## ஸ்ரீராமருக்கும், கும்பகர்னனுக்கும்,
## உயுத்தம்.

பூமிமேச்சிமே் அண்ணாமலைக்கோர்துணை என்ற வர்ணமெட்டு.

கும்பகர்னன்.

முன்னாலெங்கள் தங்கை உங்களின்மேல்மையல் தாக்கினாள்
மூக்குபோக்கினாள் காதை போக்கினாள் என்
மூக்கும்போனதுப்போல் லங்கைவேந்தன்மூக்கும் போகுதாள்

ஆனதும் ஆனதே ஆண்டவாநின்சேவை யானதே
துதியானதே பாவம் போனதே இனி
அட்டியில்லாமலே பாணப்பிரயோகம் கொட்டுவேனிப்போதே

### ஸ்ரீராமர்.

வாளும்பரிசையும் வலக்கைதடியும் பிடித்தாய்
பாவம்எடுத்தாய் என்மேல் விடுத்தாய் அதை
வாட்டியே இடதுகையும் வலக்காலும் ஒடித்தேன்

### கும்பகர்னன்.

வந்தவேளையிது நல்லவேளை என்ற வர்னமெட்டு

காலுங்கரமும் போனாலுமென்ன
காட்டுகிறேனெந்தன் வீரமெல்லாமுன்
காலடியிலுயிர் போனாலும்போகட்டும்
காக்ஷிதரவேணுமையா

### ஸ்ரீராமர்.

ஆச்சுதுஉன் தலை வானுலகிற்கே
அனுப்பிவைத்தேனுன் போயிவிடு
மோக்ஷங்கொடுக்கிறே னுனக்குமற்றோருக்கும்
முன்னதாகநீர் போய்ச்சேருமே

---

# இந்திரஜித்துக்கும், இலக்ஷ்மணருக்கும் உயுத்தம்.

மலடிவயிற்று மகன்போலே என்ற வர்னமெட்டு.

### லக்ஷ்மணன்.

வைத்தேரியதேர் பிணமும்எரிபட-உடல்
ரத்தம்எழுந்திட சுற்றமும்விழுந்திட-மிகு
பற்றியவுந்தன் பலமுங்குலைந்திட கணை தொட்டேனே
மலைகளெல்லாம்வெந்து நீறாய்இறைந்திட-கை
வாழிநெடுங்கணை பெங்கும்நிறைந்திட-பெரு
எழுகடல்களும் வற்றிக்குறைபட கணை விட்டேனே

### இந்திரஜித்து.

மாருதிமேல்வருஞ்சிங்காரா-உன்
ஆணவமரிவேன் கெம்பீரா-நாக
பாசத்தாலடைந்ததை அறியீரா கணை — தொடுப்பேனே

எனைவென்றிட வுன்னாலாமா-மேக
நாதனென்றறிந்தும் வரலாமா-எந்தன்
கணையுனைவிட்டுப் போயிடுமா-உனை — யடித்தேனே

### லக்ஷ்மணன்.

உந்தனின்வீரஞ் செல்லாது-இந்த
ராமபாணமும் பொல்லாது-உந்தன்
ஆவியும் இனிமேல் நில்லாது-இந்த்ர — ஜித்தேகேள்

கணையிதோவிடுகிறேன் வாங்கிக்கொள்-இதை
கபடாவுன்மேற் றாங்கிக்கொள்-எம
லோகமதனையே சேர்ந்துக்கொள்-நீ — யொழிந்தாயே

## இந்திரஜித்து இரந்ததற்காக

# மண்டோதரி புலம்பல்.

நீதிநெறியுணர்ந்த என்ற வர்ணமெட்டு.

ஐயையோமடிந்தாயோ ஆணழகா நீயும் — ஐயோ மகனே
மெய்யாகவுலகையும் ஆள்வாயென்றிருந்தேன் — ஐயோ மகனே
தலைகள்பத்துள்ள உன் தந்தையைப்போலே — ஐயோ மகனே
நிலையாக நீவாழ்வாய் என்றுநானெண்ணினேன் — ஐயோ மகனே
தன்னிகரில்லாத உன்னையிவ்வுலகிலோர் — ஐயோ மகனே
சின்னமனிதன்கொல்ல என்னபாவஞ்செய்தேன் — ஐயோ மகனே
பெண்ணால்குடிகெட்டதாய் செய்தானுன் தந்தை — ஐயோ மகனே
மண்ணோடுமண்ணாய் போனாயோஎன்செய்வேன் — ஐயோ மகனே
பாவியுன்னத்தையும் கோள்களுரைத்ததால் — ஐயோ மகனே
ஆவியும்நீவிட்டு போகலாச்சுதே — ஐயோ மகனே

# ஸ்ரீராமருக்கும், இராவணனுக்கும்,

# உயுத்தம்.

வங்கார மார்பிலணி என்ற வர்னமெட்டு.

## ஸ்ரீராமர்.

சண்டாள னான கொலை பாதகனே சீதைதனை
கண்டாயன் னட்டடங்கி காலனால மேககவி
உண்டாளி லேயடுத்தான் சீதைதனை விட்டுவிடு — அறிவாயே

## இராவணன்.

ஆவியுயிர் போர்களத்தில் பேகிடினும் சீதைதனை
யானும்விடப் போரதில்லை போர்புரிய வாருமையா
ராமனெனும் பேருடைத் தயோத்திகர் வாழுமின்ற — நரனே நீ

## ஸ்ரீராமர்.

வடவையென மலையதென கடலதென ககனமென
திடுதிடென முடிவருடும் சிலைதனை படுகுவைநீ
விடுகிறேனுன் கடுகவிதோ அடகொடிய ராவணனே — முழுமூடா

## இராவணன்.

வாயுகணை வருணகணை வேலின்கணை சூலகணை
தீயின்கணை பிரமகணை சிவனின்கணை நாககணை
ஆயகணையும் பலவும் யானும்விட்டேன் நீபடைவாய் — ஸ்ரீராமா

## ஸ்ரீராமர்.

வேதனைகளே புரியும்பா தகனேயுனைவதைக்க
ஆதிவிதி நாளுனக்கு நேர்ந்ததென வோவறியேன்
ராமகணை யொன்றலது வேறுகணை யானும்விடேன் — பழிகாரா

## இராவணன்.

ஆனதெல்லா மானதையா நானும்விடப் போரதில்லை
சேனையொடு யுன்னையெதிர் வாதுகொண்டு ஜாடுகிறேன்
மானிடனே நீயுமென்னை யேஜெயிக்கப் போரதில்லை — ரகுராமா

## ஸ்ரீராமரால், இராவணன் இறந்துபோகுதல்.

பத்துதலை யும்பனையின் காயெனவே யானறுத்தால்
தொத்திதொத்தி யேவருதும் சூதுதனை யானறிவேன்
பற்றுவபர் கலசமொடு வெட்டிதலை சாய்த்தனனே — மடிவாயே

## இராவணன் இறந்ததற்காக மண்டோதரி புலம்பல்.

நடந்ததென்ன சொல்லம்மா என்றமெட்டு.

மடிந்தனரேநாதன் மண்டோதரியைவிட்டு
மடிந்தனரேநாதன்

துடித்துத்துடித்துக்கண் ணீர்சொரிந்திட
ஸ்ரீராமன்கணை மேலேதுளைத்திட
அடுத்தவிதியும் நெருங்கியேகூடிட
அன்னைசீதைமேல் பழிதேட (மடி)

நிலையுடன்லங்கையில் வாழ்வாயென்றெண்ணினேன்
கலைத்திடவுன்தங்கை வந்திட்டாளேநமன்
உலைவாய்மெழுகுபோல் உனைவிட்டுக்கலங்குறேன்
உயர்துணைகாணேனே (மடி)

சீதையின்மேல்வைத்த ஆசையினாலே
சிரழிக்கயிந்த படுகளத்தினிலே
பேதையைவிட்டாய் மண்டலந்தனிலே
பேரானந்தமானாய்மேலே (மடி)

---

## பரதருக்கு, அநுமார் சங்கிரக ராமாயணம் கூறல்.

இராகம்-கல்யாணி-தாளம்-அடசாப்பு.

பல்லவி

பரதமகாராஜனேகேளாய்-ராமன்சேதி - பரதமகாராஜனேகேளாய்

அநுபல்லவி.

திரம்உலாவியசித்ர கூடத்திலேமின்னே
திருவடிகள்நீகொண்டு போகியபின்னே
இரகுபதிதண்டகம ணத்தில்அடிநீட்டினான்
ராக்ஷதவீரர்களைஉ பேக்ஷையறமாட்டினான் (பர)

சரணங்கள்

அந்தமுனிவர்க்கபயம் ஈந்தான்-பிறகு
அகஸ்தியமுனிஆசிரமம் சேர்ந்தான்-அவன்
தந்தபடைமுழுதும் கொண்டான்-வந்து
சனகியொடுபஞ்சவடி கண்டான்

வந்தசூர்ப்பநகிஅவன் வாதாடும்நாளிலே
வள்ளல்இளையவன் அங்கை மீதாடும்வாளிவே
கந்தமூலையும்செவியும் நாசியும்நறுக்கினன்
கரதூஷணரையும்அவ ளாலேநறுக்கினன் (பர)

பின்னுகமானவர விடனே-அதின்
பிறகுகணையொன்றில்அது படவே-ஒரு
சன்னியாசிராவணன் அடுத்தான்-சீதை
தன்னைநிலமங்கையோ டெடுத்தான்

அந்நிலையிலேவரு சடாயுவைவருத்தினன்
அம்மைஅசோகவன காவலில்இருத்தினன்
கன்னிகைதனைச்சாமி தேடிமனதேங்கினன்
கழுசரசனைக்கண்டு கவந்தன்உயிர்வாங்கினன் (பர)

சவரிசொல்லியவழி நடந்தான்-என்
தனையடிமையாகவே தொடர்ந்தான்-பின்
கவடுள்ளமரங்கள்துணி செய்தான்-அந்த
காலன்வாலியையும்விழ எய்தான்

அவனியைசுக்ரீவ னுக்குதவிமீளவும்
அடியேன்அறிந்தம்மை நிலைகண்டுமீளவும்
தளம்உளவிபீஷணர்க் கபயங்கொடுத்தனன்
சாமிதிருவணையொன்று கடல்மேலெடுத்தனன் (பர)

பண்டைலங்கையின்மதில் பிடித்தான்-எழு
பதுவெள்ளமுங்கொண் டிடித்தான்-வெகு
கண்டஅரக்கரை மடுத்தான்-பயிர்க
களையெடுத்ததுபோல் ளடுத்தான்

அண்டர்பணியுந்தம்பியு நெடுங்கணைகள்தாக்கினன்
அதிகாயனையும்இந்த்ர சித்தையும்மண்ணாக்கினன்
கொண்டல்மணிவண்ணனும் சிலகணைமுடிக்கினன்
கும்பகர்னனையும்ரா வணனையும்ஒடுக்கினன் (பர)

மதிநுதல்சீதைதனை உற்றான்-அங்கே
வந்ததசரதன்வரம் பெற்றான்-தனது
பதியில்வரவேஉளம் மதித்தான்-புஷ்
பகமீதில்சேவடி பதித்தான்

எதிர்படும்காடுகோடும் கண்டுதாண்டினான்
இமையவர்புரந்தரா இகல்புகழுவேண்டினான்
அதிமுனிபரத்துவாசன் ஆசிரமம்மேவினான்
அதற்குன் உனைக்காண அடியேனை ஏவினான் (பா)

# ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம்.

## விருத்தம்.

சித்திரமண்டபம் அதிலே உள்ளம்கொண்டு
தேவர்கள்மானிடர்கள் செய்யும் சேவைகொண்டு
சுத்திபெருகுகன் விபீஷணன் சுக்ரீவன்
துணைவர்பணிகொண்டு சிங்காசனமேற் கொண்டு
சத்தியமு நீதியுமேற் கொண்டு துள்ளச்
சகலமுங்கைக்கொண்டு செங்கோல் கொண்டராமன்
பத்தினிசா னகியுடனே உலகைஆளும்
படிக்கொண்டான் அபிஷேகமுடிக் கொண்டானே.

மங்களம்! மங்களம்!! மங்களம்!!!

இராமாயண திருப்புகழ்
காவடிச்சிந்து.

சம்பூர்ணம்.

---

## மத்ர ரா[...]ண சுருக்கத்துதி.

### வங்கார மார்பிலணி என்ற வர்ன மெட்டு.

தேவர்முறை கூறபுவி மீதுதிரு மாதினொடு
மேவியவ தாரம்புரிந் தேமுனிவன் வேள்விநிறை
வேறக்கொடுந் தாடகையு மாவிவிட பாணம்விடு — ரகுநாதா

தேயமிது லாபுரியி லேகவகல் ஹாவினுட
சாபந்துலைத் தேயனையை மாலைபுனைந் தேபரசு
ராமனகம் பாவம்விட தானகரை சேர்ந்திலகு — திருநேயா

ஆவலொடு தாமணிகி ரீடமதை யேயாதன்
ருணனிய கானகத்திற் கேயினையன் சீதையொடு
போகநதி மீளசித்ர கூடமலை சேரழகுப் . — பொறையாளா

ஆசையுட னேபரதன் வாரதரிந் தேமிதியை
யீயவவ னேகிடவி ராதனுயிர் போகிடஜ
டாயுவைசி னேகஞ்சொலி பாஞ்சவடி திரத்தமர் — வனவாசா

பாவகுண சூர்ப்பனகி யாமாக்க மாநுபங்க
மாககர தூஷணன்வின் ளுடடைய மானுமிறை
யாமவநு மானுடன்சுக் ரீபனுக்காய் வாலிபட — முனிதேவா

பாரமந்தி சேனையொடு சேதுகட்டி மேவிலங்கை
ராவணனு மாளகணை யேவிமனை யாளுடனே
தூய்மையன்வீ பீஷணர்க்கு சூடிலங்கைய யோத்திமுடி — புனைமார்பா

தாவிவருங் கோதையர்க ளாரதன மீதுமய
லாகிமதி பாழடைந்து சூதுகுடி கேடர்கொலை
யாளரொடு கூடிதுய ராகிதின மேவருந்தி — யுழலாமல்

சாமியுனை யேபணிய நாமமொழி யேபுகல
சாதுவடி வேலனொடு வோதுசிறு நாராயண
சாமிக்கரு ளேபுரிய பூமியில்வந் தேயடைந்தேன் — பெருமானே

ஸ்ரீமத்ராமாயண சுருக்கத்துதி

முற்றிற்று.

# நூதன புத்தக [illegible]ளம்பரம்.

## ஸ்திரீபுருஷ லக்ஷணக்குறி சாஸ்திரம்.

இந்த ஸ்திரீ புருஷ லக்ஷணக்குறி சாஸ்திரமென்னும் கைகண்ட சாஸ்திரமானது உள்ளங்கால் முதற்கொண்டு உச்சிவரையிலுமுண்டான அவயவங்களின் உருப்புகள் ஒவ்வொன்றிற்கும்இம்மாதிரியிருந்தால் இன்னின்ன பலன் என்றும் அஸ்தமாகிய கைகளின்ரேகையின் அஸ்தக்குறிப்பும், பிள்ளை, பெண், தாரம், இத்தனையென்றுவிபரமாக ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும் வெவ்வேறு தெரிந்துக்கொள்ளும்படிக்கு புதைநிதியம்போல் கிடைத்து யாவருக்கும் உபயோகமாகும்படி திக்கு கடிதத்தில் அச்சிட்டிருக்கிறது.

புத்தகம் 1-க்கு விலை அணா 0 12 0

## அனுபோக ஜாதகரகசியம்

இந்த அனுபோக ஜாதகரகசியமென்னும் கைகண்ட சாஸ்திரமானது புதை நிதியம்போல் கிடைத்து அச்சிட்டரங்கேற்றி யாவரும் கையாண்டு வருமாறு வெளிவந்திருக்கின்றமையால் இந்நூலைக் கண்ணுற்ற நண்பர்களியாவரும் சோதிடரை விரும்பாமல் ஜாதகம் குறிப்பு, லக்கினம், கோசாரபலன் முதலிய எல்லா நன்மைதுன்மைகளையும் தாங்களே அறிந்துக் கொள்ளலாம் அன்றியும் ஸ்திரீகள் ஜாதகமும் அடங்கி யிருக்கின்றது உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு புல்பயிண்டு செய்திருக்கிறது இதன் விலை அணா 0 12 0

## மஸ்தான் சாகிபு பாடல்

மூலமும்-உரையும்.

மகாமகிமைபொருந்திய மஸ்தான் சாகிபு பாடலுக்கு மூலமும் பொழிப்புரையும் இல்லாததினால் சிலபெரியோர்கள் கேட்டுக்கொண்டதினால் உரையெழுதி உயர்ந் கடிதத்தில் அச்சிட்டிருக்கிறேன் இதைவாங்கி வாசிப்போர்கள் சரியை கிரியை யோகம் ஞானம் முதலியவைகளையும் சன்மார்க்கத்தையும் சர்வேஸ்வரனிடத்துள்ள அன்பையும் பெறுவார்கள் ஆனதுபற்றி ஒவ்வொருவரு மத[illegible] இதை வாங்கிப்படிக்கவேண்டியது முக்கியம்

[illegible] உயர்ந்ததிப்பு புல் காலிகோபயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூபா 3 0 0

---

இ. து. மாசிலாமணி முதலியார்

சுந்தரவிலாசம் பிரஸ்

நெ. 3-25, வல்லம்[illegible]காருசெட்டி வீதி வேப்பேரி போஸ்டு, மதராஸ்.

17924b

# நூதன புஸ்தக விளம்பரம்.

## ஸ்திரீ புருஷ லக்ஷணக் குறி சாஸ்திரம்.

இந்த ஸ்திரீ புருஷ லக்ஷணக் குறி சாஸ்திரமென்னும் கைகண்ட சாஸ்திரமானது உள்ளங்கால் முதற்கொண்டு உச்சிமயிர்வரையிலுமுண்டான அவயவங்களின் உருப்புகளை ஒவ்வொன்றிற்கும் இப்படியாகவிருந்தால் இன்னின்ன பலன் வருமென்று விஸ்தாரமாகிய வசனங்களினோடே கையின் அவதக்குறி புத்திர, பிள்ளை, பெண், தாரம், இத்தனையென்று விபரமாக ஸ்திரீகளுக்கும், புருஷர்களுக்கும் வெவ்வேறு தெரிந்துக்கொள்ளும்படிக்கு புதைநிதியம்போல் கிடைத்தது யாவருக்கும் உபயோகமாகும்படி நிக்கு புஸ்தகத்தில் அச்சிட்டிருக்கிறது.

புக்தகம் 1-க்கு விலை அணா 0 12 0

## அனுபோக ஜாதகரகசியம்

இந்த அனுபோக ஜாதகரகசியமென்னும் கைகண்ட சாஸ்திரமானது புதைநிதியம்போல் கிடைத்தது அச்சிட்டுக் கேற்றியாவரும் கையாண்டு வரும்படி எளிவாக சருக்கமாயமைப்பல் இந்நாலைக் கண்ணுற நண்பர்களியாவரும் சோதிடரை விரும்பாமல் ஜாதகம் குறிப்பு, லக்கினம், கோசாரபலன் முதலிய எல்லா கணக்குகளையும் தாங்களே அறிந்துக்கொள்ளலாம் அன்றியும் ஸ்திரீகள் ஜாதகமும் அடங்கியிருக்கின்றது உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டு புல்பயிண்டு செய்திருக்கிறது இதன் விலை அணா 0 12 0

## மஸ்தான் சாகிபு பாடல்

மூலமும்-உரையும்.

மகாமகிமைபொருந்திய மஸ்தான் சாகிபு பாடலுக்கு மூலமும் பொழிப்புரையும் இல்லாததினால் சிலபெரியோர்கள் கேட்டுக்கொண்டதினால் உரையெழுதி உயர்ந்த கடிதத்தில் அச்சிட்டிருக்கிறேன் இதைவாங்கி வாசிப்போர்கள் சரியை கிரியை யோகம் ஞானம் முதலியவைகளையும் சன்மார்க்கத்தையும் சர்வேஸ்வரனிடத்துள்ள அன்பையும் பெறுவார்கள் ஆனதுபற்றி ஒவ்வொரு மதஸ்தரும் இதை வாங்கிப்படிக்கவேண்டியது முக்கியம்

கிளேஸகடிதம் உயர்ந்த கிப்பு புல் காலிகோபயிண்டு புத்தகம் 1-க்கு
விலை ரூபா 3 0 0

---

பூ. து மாசிலாமணி முதலியார்

சுந்தரவிலாசம் பிரஸ்

நெ. 3-25, வல்லம் பங்காருசெட்டி வீதி வேப்பேரி போஸ்டு, மதராஸ்.